T-UN-352

# திருச்சிராப்பள்ளித் தமிழ்ச் சங்கம்

( பதிவு எண் : S. 24-1956 )

பதிவு செய்யப்பெற்ற அலுவலகம் :

தமிழ்ச் சங்க கட்டிடம்

மேல் அரண்சாலை :: திருச்சிராப்பள்ளி-8

# திருச்சிராப்பள்ளித் தமிழ்ச் சங்கம்

## ஆட்சிக் குழுவினர்



# திருச்சிராப்பள்ளித் தமிழ்ச் சங்கம்

## திருச்சிராப்பள்ளி.

— ★ —

### செந்தமிழ்ச் செல்வர்களே,

**த**ங்களனைவரையும் வருக! வருக! என வரவேற்கிறோம். சங்க அறிக்கையை மகிழ்வுடன் தங்கள் முன்வைக்க விரும்புகிறோம்.

தித்திக்கும் தெள்ளமுதாக, தெள்ளமுதின் இனிய முத்துக்கனியாக நம் முன்னோர் போற்றிய முத்தமிழ் பண்டு பெரிதும் போற்றிப் பேணப்பெற்றது. சங்கம் வைத்து மொழி வளர்த்த பெருமை நம் முன்னோர்க்கே உரியது. இலக்கிய வளமும் இலக்கண நலமும் பெற்றுத் திகழ்ந்தது. இனிய பண்பாடு எங்கும் பரவியது. கலையும் நாகரிகமும் கனிந்து இன்பஞ் செய்தன.

தமிழ் மொழி, கலை, பண்பாடு, நாகரிகம் முதலியன மறுமலர்ச்சியுற்று வளர்ச்சிபெறச் செய்திடும் நன்நோக்கோடு நம் தமிழ்ச் சங்கம் தோற்றுவிக்கப்பெற்றுள்ளது. புரோமனேடு ரோடு 2-ஆம் எண் இல்லத்தில் கருவுற்றுத் திருவரங்கம் வாசுதேவபுரத்திலுள்ள 'ராஜபவன்' மாளிகையிலே பிறந்த நம் திருச்சிராப்பள்ளித் தமிழ்ச்சங்கம் இன்று ஐந்தாண்டு நிறைவு பெற்றுள்ளது. இன்று நம் புதிய சங்க மன்றத்திலே குறுகுறு நடந்து சிறுகை நீட்டித் தளர் நடை பயின்று இன்பஞ் செய்கின்றது என்பதனை மகிழ்வுடன் கூறிக்கொள்கின்றோம்.

சங்கத்திற்கு மன்றம் கட்டும் முயற்சியினை மேற்கொண்டோம். நாட்டு மக்களின் நலன் கருதும் நந்தமிழ் நாட்டு அரசும் நகர மன்றமும் நல்லதொரு இடம் தந்துதவினர். கட்டிடச் செலவிற்கு நிதி வேண்டிச் சென்றோம். பொதுநலம் பேணும் நமதருஞ்செல்வர்கள் ஆயிரமாயிரமாக அள்ளிக்கொடுத்தார்கள் - வழங்கி வருகிறார்கள். நகரப் பெருமக்களின் நன்கொடையும் ஆர்வமிக்கவர்களின் அரு முயற்சியும் இதோ எழிலாரும் இனிய மன்றமாக எழுந்து, நம் நகரின் இதயம்போல் விளங்குகிறது. இக்குறுகிய கால அளவிலே நம் சங்கம் பெற்றுள்ள வளர்ச்சி எதிர்பாராததே என்பதனைப் பணிவோடு குறிப்பிட விரும்புகின்றோம். இதயத் துடிப்பை இனிதாகப் போற்றி இயங்கச் செய்து பயன் பெறும் பொறுப்பு நம் அனைவரையும் சார்ந்ததாகும்.

### சங்கப் பணிகள் :

விரும்பிய பணிகள் அனைத்தையும் முடிக்க இயலாது போயினும் நமது சங்கப் பணிகள் பல துறைகளிலும் அமைந்து பயன் தந்துள்ளன. ஆன்றவிந்தடங்கிய கொள்கைச் சான்றோரின் அரிய கருத்துக்களைக் கேட்டு நலம்பெறும் நோக்கோடு **திங்கள் கூட்டங்கள்** நடைபெற்று வருகின்றன.

மனித குலத்திற்கே தனிச்சிறப்பாக அமைந்துள்ள சிந்தனைச் செல்வத்தை வளர்க்கும் நோக்கோடு **சிந்தனைக்குழு** கூடிச் சிந்திக்கும் பழக்கத்தைத் தூண்டிச் செயல்படச் செய்து வந்துள்ளது.

நூலறிவும் நுண்ணறிவும் மிகப் பெற்றவர்களும் சொல்லாற்றல் பெறாத காரணத்தால் அவர்தம் கருத்துக் கருவூலங்கள் பிறர்க்குப் பயன்படாமல் அமைந்துவிடுகின்றன. இந்நிலை நீங்கிப் பேச்சுக்கலையில் பயிற்சிபெற்று, 'தாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையம்' எனக்கேட்டார் பிணிக்க எடுத்துக்கூறும் வாய்ப்பினை அளிக்கும் நோக்கோடு **சொற் பயிற்சிக்குழு** செயல்பட்டுவருகிறது.

தோண்டச்சுரக்கும் மணற்கேணி போன்றது திருக்குறள். சிந்திக்கச் சிந்திக்க அரிய புதிய கருத்துக்கள் பெருகும் பெற்றிவாய்ந்தது திருக்குறள். இலட்சிய வாழ்வினை எடுத்துக்காட்டும் இனிய நூலாகிய திருக்குறட்பாக்களை ஆராயும் நோக்கோடு **திருக்குறள் ஆய்வுக்குழு** எனும் அரியதொரு அமைப்பைக் கண்டுள்ளோம். ஆர்வமிக்க செல்வர்கள் அறிஞர் பெரு மக்களை விருந்துக்கழைத்துக் குறிப்பிட்ட குறட்பாக்களை

ஆராயும்படி செய்வார்கள். புதிய அரிய கருத்துக்கள் பூத்து மணம் பரப்பும். நகருக்கு வெளியிலுள்ள நல்லிடங்களுக்கும் மகிழ் உலாவாகச் சென்று திருக்குறள் ஆய்வதும் உண்டு. கண்ணுக்கும் கருத்துக்கும் நாவிற்கும் நல்விருந்து பெறுவதும் உண்டு.

இன்பத் தமிழ் இலக்கியக் கருவூலத்தை, **இலக்கணச்** செல்வத்தைத் தமிழ் மக்கள் **துய்த்** தின்புறும்பொருட்டு நகரின் பலவிடங்**களிலும் திருக்குறள், சங்க இலக்கியங்கள், சிலப்பதிகாரம், தொல்காப்பியம், நன்னூல்** முதலிய **வகுப்புக்கள்** நடத்தி வந்துள்ளோம்.

பல்கலைக் கழக வித்துவான் தேர்வு எழுத விரும்பும் அன்பர்களுக்கு **வித்துவான் வகுப்புக்கள்** நடத்தி வந்துள்ளோம்.

திருக்குறள் பயிற்சி மக்களிடம் பரவும் பொருட்டுத் **திருக்குறள் தேர்வு மன்றம்** நிறுவித் திருக்குறளில் தேர்வு நடத்தியுள்ளோம்.

தொல்காப்பியத்தில் மக்கள் பயிற்சி பெறும் பொருட்டுத் **தொல்காப்பியப் பயிற்சிக்குழு** தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

இக்காலத்திற்குத் தேவைப்படும் பொருந்திய கலைச்சொற்களை இலக்கியம், கல்வெட்டு, சாசனம் முதலியன கொண்டு கண்டும், புதியதாகப் படைத்தும் தமிழ் மொழியின் சொல் வளத்தைப் பெருக்கும் நோக்கோடு **சொல்லாக்கக்குழு** நிறுவப்பெற்றுள்ளது.

பொது மக்களின் பாராட்டைப் பெற்ற பெரு விழாக்களை நடத்தி உள்ளோம்.

இவ்வாறு சென்ற ஆண்டுகளில் சங்கம் ஆற்றிய பணிகளின் விரிவு அடுத்துவரும் பகுதிகளில் தரப்பெற்றுள்ளன.

சாதி சமய கட்சி வர்க்க வேறுபாடின்றித் தமிழ் அன்பர்கள் கூடிப் பணிபுரியும் அமைப்பாகத் திகழும் நம் சங்கத்திற்கு இதுவரை ஆதரவு நல்கிய அனைவர்க்கும் நம் இதயம் கனிந்த நன்றியும் வணக்கமும் உரியன வாகுக! தொடர்ந்து சங்கப் பணிகளுக்கு நல்லாதரவு நல்கிவர வேண்டுகிறோம்.

**எட்வர்டு பால் மதுரம்,**
தலைவர்.

**மு. அ. அருணசலம் செட்டியார்,**
**தி. ஐயன்பெருமாள் கோனுர்,**
துணைத் தலைவர்கள்.

**தெ. துரைராசப் பிள்ளை,**
அமைச்சர்.

**அ. வெ. ர. கிருஷ்ணசாமி,**
**சி. நயினர் முகம்மது,**
துணை அமைச்சர்கள்.

— **ஆவி. க. ஆவிச்சி செட்டியார்,** பொருளாளர் —

## ஐந்தாம் ஆண்டு அறிக்கை

இவ்வறிக்கைக்குரிய காலம் திருவள்ளுவராண்டு 1990 ஆவணித்திங்கள் 14-ஆம் நாள் (29—8—60) முதல் திருவள்ளுவராண்டு 1991 ஆவணித்திங்கள் 12ம் நாள் (28—8—61) முடிய உள்ள ஓராண்டு ஆகும்.

ஆட்சிக்குழுவினர் எண்ணிக்கை முந்திய ஆண்டுகளைவிட இவ்வாண்டில் அதிகரித்துள்ளது. சங்கக் கட்டிடம் கட்டுவதற்காக ரூ. 500—ம் அதற்கு மேலும் கொடுத்துச் சங்கப் புரவலர்களாகத் திகழும் வள்ளல் பெரு மக்களும் ஆட்சிக்குழுவில் இடம்பெறுகின்றனர். இன்றுள்ள ஆட்சிக்குழு வருமாறு :

தலைவர் : **புரவலர், டாக்டர் எட்வர்டு பால் மதுரம், M. L. A.**

**துணைத்** தலைவர்கள் : **புரவலர், திரு. மு. அ. அருணசலம் செட்டியார்**
செம்பொருட்காட்சியர் வித்துவான், **புரவலர், திரு. ஐயன்பெருமாள் கோனுர்**

அமைச்சர் : **புரவலர், திரு. தெ. துரைராசப் பிள்ளை M. L. C.**

# திருச்சிராப்பள்ளித் தமிழ்ச் சங்கம்



தலைவர், புரவலர்
**டாக்டர் எட்வர்டு பால் மதுரம், M. L. A.**



துணைத் தலைவர், புரவலர்
**திரு. மு. அ. அருணாசலம் செட்டியார்**



துணைத் தலைவர், புரவலர்
செம்பொருட் காட்சியர், வித்துவான்
**திரு. ஐயன் பெருமாள் கோனார்**

# திருச்சிராப்பள்ளித் தமிழ்ச் சங்கம் ஆட்சிக்குழு உறுப்பினர்கள்



அமைச்சர், புரவலர்
**திரு. தெ. துரைராஜ பிள்ளை, M. L. C.**



துணை அமைச்சர்,
**திரு. நயினார் முகம்மது, M. A.**



துணை அமைச்சர், புரவலர், திரு.
**அ. வெ. ர. கிருஷ்ணசாமி ரெட்டியார்**



பொருளாளர், புரவலர்,
**திரு. ஆவி. க. ஆவிச்சி செட்டியார்**

துணை அமைச்சர்கள் : புரவலர், திரு. அ. வெ. ர. கிருட்டினசாமி ரெட்டியார்
பேராசிரியர், நயினுர் முகமது M. A.

பொருளாளர் : புரவலர், திரு. ஆவி. க. ஆவிச்சி செட்டியார்

புரவலர்கள் : முத்தமிழ்க்காவலர், கி. ஆ. பெ. விசுவநாதம்
திரு. மு. ஐயன்பெருமாள் கோனுர்
,, ந. சுப்பிரமணியன் செட்டியார்
,, க. இராசகோபால் பிள்ளை
,, ஆவி. க. சோமசுந்தரம் செட்டியார்
,, சா. பெரியசாமி
,, அரு. அண்ணுமலைச் செட்டியார்
,, M. V. கிருட்டினமூர்த்தி ராவ்
,, A சோமசுந்தர ரெட்டியார்
,, த. வீ. வீரப்பச் செட்டியார்
,, P. R. நாராயணசாமி ஐயர்
,, A. சுந்தரம் பிள்ளை
,, சுப. காசிச் செட்டியார்
,, சித. அரு. அருணுசலம் செட்டியார்
,, சா. ராம. சித. பழநியப்பச் செட்டியார்
,, அரு. அருணுசலம் பிள்ளை
,, R. கிருட்டினசாமி ரெட்டியார், M. L. A.
,, R. செயதேவன் செட்டியார்.

உறுப்பினர்கள் :

பேராசிரியர் ரம்போலா மாஸ்கரேனஸ், M. A.
,, தி. செ. பாலசுப்ரமணியம், M. A.
,, திரு. P. சவரிமுத்து, M. A.
வித்துவான் கோ. இரத்தினம் பிள்ளை
,, வி. அ. பரிமேலழகர்
,, வி. துரைசாமி
,, கு. விசுவநாதன், B. A.,
புலவர் கு. திருமேனி, B. O. L.
திரு. மெ. கயிலைஅனந்தர், B. A. B. L.,
,, பி. ரெங்கசாமி ரெட்டியார், B. A. B. L.,
,, ம. முத்துசாமி பிள்ளை, B. A., B L,
,, பி. அப்துல் கரீம் B. A., B. L,
,, சு. ராம. சு. சுப்பையாச் செட்டியார்
,, பொ. மாணிக்கவாசகம் பிள்ளை
,, ஆர். நாகசுந்தரம், M. C.
,, K. பிரமச்சாரி, M. A., L. T.,
,, கு. வரதராசன், B. A.
,, செ. அ. நுஸ்கி
,, ஜி. அண்ணுமலை முத்துராஜா, M. L. A.

## ஆட்சிக்குழுக் கூட்டங்கள் :

இவ்வைந்தாம் ஆண்டில் ஆட்சிக்குழு 15 முறைகள் கூடி 59 முடிவுகளைக் கண்டு உள்ளது. இது இவ்வாண்டின் தனிச்சிறப் பாகும். இவற்றுள் 8 கூட்டங்கள் சங்கத் தலைவர், டாக்டர் எ. பா. மதுரம், M L A. அவர் களின் இல்லத்தில் நடைபெற்றன. இடம் தந்து வருகை தந்து தேநீர் விருந்தும் தந்துத விய நம் தலைவரவர்களுக்கு நம் பாராட்டுக் கள் உரியனவாகுக. ஒரு கூட்டம் தில்லை நகர்ப் பள்ளியில் நடைபெற்றது. ஏனைய ஆறு கூட்டங்களும் நம் சங்க மன்றத்தில் நடைபெற்றுள்ளன. 23 முடிவுகள் சங்கக் கட்டிட வேலை பற்றியும் நிதி திரட்டுவது குறித்தும் நிதி வழங்கியோர்க்கு நன்றி தெரி வித்தும் நிறைவேற்றப் பெற்றுள்ளன. ஏனைய முடிவுகள் சங்கத்தின் பிற பணிகள் குறித்து நிறைவேற்றப் பெற்றவை.

## இவ்வாண்டில் ஆட்சிக்குழு கண்ட முடிவுகளில் இன்றியமையாதன

1. "சொற் பயிற்சிக் குழு"வை மீண்டும் தொடர்ந்து நடத்துவது; இக்குழுவை நடத்தும் பொறுப்பு திருவாளர்கள் வித்துவான் கு. விசுவநாதன், கோ.கலிய ராசன், B A, B Ed., ஆகிய இருவரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

2. சென்னை மாநிலத் தமிழ்ச் சங்க வெள்ளி விழாவிற்கு வாழ்த்துச் செய்தி அனுப்பு வது.

3. சந்தா வசூல் செய்வது, சங்க உறுப் பினர்களோடு தொடர்பு கொள்வது ஆகிய பொறுப்புகளைப் புரவலர், சா. பெரியசாமி, அவர்களிடம் ஒப் படைத்தல்.

4. தமிழ் வளர்க்கும் பிற சங்கங்களோடு சங்கச்சார்பில் தொடர்பு கொள்ளும் பொறுப்பு பேராசிரியர் ரம்போலா மாஸ்கரேனஸ், M A., அவர்களிடம் அளிக்கப்பட்டுள்ளது.

5. திரு. K. A. ராஜ்முகமது அவர்கள் எழுதி யுள்ள "ஹிந்து தர்மம்" என்ற நூலுக்கு மதிப்புரை வழங்கும் பொறுப்பைச் செம் பொருட்காட்சியர், புரவலர், திரு. ஐயன் பெருமாள் கோனர், அவர்களிடம் அளிப்பது.

6. சொல்லின் செல்வர், ரா. பி. சேதுப்பிள்ளை, B. A, B. L, அவர்களின் மறைவிற்கு வருந்தி இரங்கல் தீர்மானம் நிறை வேற்றப் பெற்றது.

7. கட்டிட வேலையை மேற்பார்க்கும் பொறுப்பு திரு. பொ. மாணிக்கவாசகம் பிள்ளை அவர்களிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளது.

8. சங்கமன்றத்தை நிர்வகித்துப்பராமரித்து வர விதிகள் தொகுக்கும் பொருட்டுப் புரவலர், டாக்டர், எ. பா. மதுரம், அவர் கள், புரவலர், திரு. தெ. துரைராசப் பிள்ளை, அவர்கள் புரவலர், திரு. மு. அ. அருணசலம் செட்டியார் அவர்கள், புர வலர், திரு. க. இராசகோபால் பிள்ளை அவர்கள், புரவலர் திரு. மு. ஐயன் பெருமாள் கோனர் அவர்கள், திரு. பொ. மாணிக்கவாசகம் பிள்ளை அவர்கள், பேராசிரியர், ரம்போலா மாஸ்கரேனஸ் அவர்கள் ஆகிய எழுவர் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

9. சங்கத்தின் பொருளாதார விவரங்கள் நிகழ்ச்சி நிரலில் தெளிவாகத் தெரி விக்கப்பட்ட பின்னரே ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்.

10. பேராசிரியர் ரம்போலா மாஸ்கரேனஸ் அவர்களின் வாழ்க்கைத் துணைவியாரின் மறைவிற்கு இரங்கல் தீர்மானம் நிறை வேற்றப்பெறறது.

11. சங்க மன்றத்தின் கீழ்ப் பகுதியை வாடகைக்கு விடுவதென முடிவு செய்யப் பட்டது; இப்பொறுப்பை ஏற்று நடத்த புரவலர், திரு. மு. அருணசலம் செட்டி யார், புரவலர், திரு. தெ. துரைராசப் பிள்ளை, புரவலர், திரு. க. இராசகோபால் பிள்ளை ஆகிய மூவர் கொண்ட குழு அமைக்கப்பெற்றுள்ளது.

## திருச்சிராப்பள்ளித் தமிழ்ச் சங்கம்

### ஆட்சிக்குழு உறுப்பினர்கள்



புரவலர், முத்தமிழ்க் காவலர்

**திரு. கி. ஆ. பெ. விசுவநாதம்**



புரவலர்

**திரு. க. ராஜகோபால் பிள்ளை**



புரவலர்

**திரு மு. ஐயன்பெருமாள் கோனர்**



புரவலர்

**திரு. பி ரா. நாராயணசாமி அய்யர்**



புரவலர் திரு.

**சா. ராம சித. பழநியப்பச் செட்டியார்**

# திருச்சிராப்பள்ளித் தமிழ்ச் சங்கம்

## ஆட்சிக்குழு உறுப்பினர்கள்



புரவலர்
திரு. சுப. காசிச் செட்டியார்



புரவலர் திரு.
அரு. அண்ணாமலைச் செட்டியார்



புரவலர்
திரு. சா. பெரியசாமி



புரவலர்
திரு. தி. அ. சுந்தரம் பிள்ளை



புரவலர் திரு.
சித. அரு. அருணாசலம் செட்டியார்

# இவ்வாண்டில் நிதி வழங்கிச் சங்கம் வளர்த்த அன்பர்கள்

| | | ரூபாய் |
|---|---|---|
| 1. | திரு. M. V. கிருட்டினமூர்த்தி ராவ் | 1001 |
| 2. | ,, A. சோமசுந்தர ரெட்டியார் | 3000 |
| 3. | திருச்சி மாவட்டத் தண்டல் நாயகம் (திரு. G.A. குலாம் முகம்மது பாட்சா ஐ.ஏ.எஸ்.) சென்னை செக்ரடேரியட் நாடகக் குழுவினர் திரட்டிய நிதியிலிருந்து | 5000 |
| 4. | திரு. P. R. நாராயணசாமி அய்யர் | 1001 |
| 5. | ,, T. V. வீரப்பச் செட்டியார் | 1001 |
| 6. | ,, அ. வெ. ர. கிருட்டினசாமி ரெட்டியார் | 501 |
| 7. | ,, கு. வரதராசப் பிள்ளை | 250 |
| 8. | டி. வி. எஸ். & சன்ஸ் | 1001 |
| 9. | சிம்சன் & கோ. | 1001 |
| 10. | திரு. A. சுந்தரம் பிள்ளை | 1001 |
| 11. | ,, சு. ப. காசிச் செட்டியார் | 500 |
| 12. | தென் சென்னை மின்வழங்கு நிலையம், திருச்சி | 1001 |
| 13. | திரு. சித. அரு. அருணுசலம் செட்டியார் | 1000 |
| 14. | ,, சா. ராம. சித. பழனியப்பச் செட்டியார் | 1000 |
| 15. | ,, அருணுசலம் பிள்ளை | 1001 |
| 16. | ,, R. கிருட்டினசாமி ரெட்டியார் எம்.எல்.ஏ. | 2000 |
| 17. | ,, ஜி. இராதாகிருட்டினன் & சன்ஸ் ஆர். செயதேவன் செட்டியார் | 500 |
| 18. | ,, சு. அரு. பழனியப்பச் செட்டியார் | 250 |

# சங்கப்பணிகள்

—★—

சங்கத்திற்கு மன்றம் கட்டும் பணியில் சங்கத்தின் கருத்து முழுதும் சென்றபடியால் இவ்வாண்டிற்குரிய சங்கப்பணிகளைச் சிறப் பாக ஆற்ற இயலாது போயிற்று.

**விழா :**

7—5—61-இல் ‘ சங்க மன்றத்தின் திறப்பு விழா ’ சங்கத் தலைவர் டாக்டர் ஏ. பா. மதுரம் எம்.எல்.ஏ. அவர்களின் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. சங்கத் துணைத்தலைவர் திரு. மு. அ. அருணசலம் செட்டியார் அவர்கள் வரவேற்பிதழ் படித்தளித்தார்கள். அமைச்சர் திரு. தெ. துரைராசப் பிள்ளை, எம். எல். சி. அவர்கள் அறிக்கை படித்தார்கள். திரு. இராம. சுப்பையாச் செட்டியார் அவர்கள் வாழ்த்துச் செய்திகள் வாசித்தார்கள். தமிழ் நாடு முத லமைச்சர் திரு. கு. காமராசர் அவர்கள் சங்க மன்றத்தைத் திறந்துவைத்து விளக் கேற்றி வைத்தார்கள். குறைந்த காலத் தில் சங்க மன்றம் கட்டித் திறக்கப் பெறு வதைப் பாராட்டிவிட்டுத் தமிழ் நாட்டின் உண்மை வரலாறு எழுதப் பெறவேண்டும் என்றும் உண்மையான தமிழ்ப் புலமை வளர வேண்டும் என்றும் தம் உரையில் குறிப் பிட்டார்கள். பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. ப. கக்கன் அவர்களும் விழாவில் கலந்து கொண்டார்கள். மன்றத்தின் கால்கோள் செய்தவர்கள் நம் முதல் அமைச்சர் அவர் களே என்பதும் கால்கோள் விழாவில் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களும் கலந்து கொண்டார்கள் என்பதும் குறிப்பிடத் தக்கவை. செம்பொருட் காட்சியர் வித்துவான் திரு. ஐயன்பெருமாள் கோனர் நன்றியுரை நிகழ்த்தினர்கள். நகர மக்கள் பெரும் அளவில் வந்து கலந்து சிறப்பித்தனர்.

**திங்கள் கூட்டங்கள் :**

10—9—60-இல் தில்லைநகர்ப் பள்ளிக் கட் டிடத்தில் முத்தமிழ்க்காவலர், திரு. கி.ஆ.பெ. விசுவநாதம் அவர்களின் தலைமையில் ஒரு பாராட்டுக்கூட்டம், நடைபெற்றது. உருசிய நாடு சென்று தமிழ்ப்பணி புரிந்து தாயகம் திரும்பிய பேராசிரியர், அ. கிருட்டினமூர்த்தி எம். ஏ., பி. எல்., பி. ஓ. எல். அவர்களுக்கு திரு. வி. நடராசன், எம். ஏ., அவர்களும், புலவர், வி. அ. பரிமேலழகர் அவர்களும், பாராட்டுரை வழங்கினர்கள். பேராசிரியர், அ. கிருட்டினமூர்த்தி அவர்கள் பாராட்டுக்குப் பதில் அளித்துவிட்டுத் தம் அயல் நாட்டு அனுபவங்கள் குறித்து விரிவுரை நிகழ்த்தி னர்கள்.

2—11—60-இல் முத்தமிழ்க் காவலர் திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்களின் தலைமை யில் திரு. ஆர். எம். கிருட்டினன் அவர்கள் சொற்பொழிவாற்றினர்கள். திரு. இரமணி அவர்கள் சில உடற்பயிற்சி குறித்த செய் முறைகளைச் செய்து காட்டினர்கள். திரு. யோகி தங்காம் பிள்ளை அவர்கள் அரிய யோகாசனங்களைச் செய்து காட்டினர்கள்.

29—11—60-இல் செம்பொருட் காட்சியர் வித்துவான், திரு. ஐயன்பெருமாள் கோனர் அவர்களின் தலைமையில் தென்னிந்திய உயர் தனிச் செவ்விசைப் புலவர், பண்ணாராய்ச்சி வித்தகர் குடந்தை, ப. சுந்தரேசன் அவர்கள் ‘இசைத் தமிழ்த் தோற்றுவாயும் முதல் ஐந் திசைப் பண்களும்’ எனும் பொருள்பற்றிச் சொற்பொழிவு நிகழ்த்தி இடையிடையே இசைகளைப் பாடியும் காட்டினர்கள்.

22—2—61-இல் திரு. த. வே. பெரியசாமி எம். எஸ். ஸி. அவர்கள் தலைமையில் திரு. மா. வா. கோபாலரத்தினம், பி. எஸ். ஸி. (ஆனர்ஸ்) அவர்கள் 'அணுவாற்றல்' எனும் பொருள்பற்றிச் சொற்பொழிவாற்றினார்கள்.

15-3-61-இல் செம்பொருட்காட்சியர் வித்துவான் திரு. ஐயன்பெருமாள் கோனார் அவர்கள் தலைமையில் பண்ணாராய்ச்சி வித்தகர், குடந்தை, ப. கதிரேசன் அவர்கள் 'ஓரேழ்ப் பாலை' எனும் தலைப்பில் இனிய இசை கலந்த சொற்பொழிவாற்றினார்கள்.

16-4-61-இல் இராமாயணப் பிரவசன வித்துவான், திரு. எஸ். வி. இராமசாமி ஐயங்கார் அவர்கள் தாம் இயற்றிய "இராம கான கீர்த்தனை"களில் சுந்தர காண்டப் பகுதிகள் சிலவற்றிற்கு விளக்கங்கூறி விரிவுரை நிகழ்த்தினார்கள். அவர்தம் மனைவியார் திருமதி, வி. செயலெட்சுமி அவர்கள் கீர்த்தனைகளைப்பாடி மகிழ்வித்தார்கள்.

17—5—61-இல் சங்க மன்றத்தில் செம்பொருட் காட்சியர் வித்துவான், திரு. ஐயன் பெருமாள் கோனார் அவர்கள் தலைமையில் 'திங்கள் கூட்ட ஆண்டு விழா' நடைபெற்றது. தவத்திரு. குன்றக்குடி அடிகளார் விழா வுரை நிகழ்த்தினார்கள்.

5—7—61-இல் சங்க மன்றத்தில் செம்பொருட்காட்சியர், வித்துவான், திரு. ஐயன் பெருமாள் கோனார் அவர்கள் தலைமையில் பண்ணாராய்ச்சி வித்தகர், சுந்தரேசனார் அவர்கள் இசைத்தமிழ் குறித்த சொற்பொழிவுத் தொடரின் மூன்றாவதாக 'நால்வகை யாழும் நாற்பெரும் பண்ணும்' எனும் பொருள் குறித்துச் சொற்பொழிவாற்றினார்கள்.

19—8—61-இல் சங்க மன்றத்தில் திரு. டி. எம். நாராயணசாமி பிள்ளை, எம்.ஏ.,பி.எல்., அவர்கள் தலைமையில் ஆட்சி மொழிக் காவலர், கீ. இராமலிங்கனார், எம்.ஏ. அவர்கள் 'என்ன குறை' எனும் தலைப்பில் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள்.

**குறள் வகுப்பு :**

திருச்சி சேவா சங்கத்தில் வியாழன் தோறும் புலவர் திரு. வீ. து. தயாளசாமி அவர்கள் 'குறள் வகுப்பு' நடத்தி வருகிறார்கள்.

**சொற்பயிற்சிக் குழு :**

24—4—61-இல் இவ்வாண்டுச் சொற்பயிற்சிக் குழுவின் தொடக்க விழா சங்கத் தலைவர் புரவலர் திரு. எ. பா. மதுரம் அவர்கள் தலைமையில் தில்லைநகர்ப் பள்ளியில் நடைபெற்றது. சங்க அமைச்சர் புரவலர் திரு. தெ. துரைராசப் பிள்ளை, எம். எல். சி. அவர்கள் தொடங்கிவைத்தார்கள்.

31—5—61-இல் இரண்டாவது கூட்டம் சங்க மன்றத்தில் சங்கத் துணை அமைச்சர் புரவலர் திரு. அ. வெ. ர. கிருட்டினசாமி ரெட்டியார் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. பல அன்பர்கள் பேசினர்.

இக்குழுவின் அமைப்பாளர்கள் வித்துவான் கு. விசுவநாதம் பி. ஏ. அவர்களுக்கும் திரு. கலியராசு பி. ஏ., பி. இ. டி., அவர்களுக்கும் சங்கத்தின் நன்றி உரியதாகுக.

**திருக்குறள் ஆய்வுக்குழு :**

11—12—60-இல் புரவலர் திரு. ந. சுப்பிரமணியம் செட்டியார் அவர்கள் தமிழ்ச் சங்க அன்பர்களைத் திருவெள்ளறைக்கு அழைத்துச் சென்று திருக்குறள் ஆய்வு நிகழச் செய்தார்கள். இனிய விருந்து செய்து இன்புறச் செய்தார்கள்.

8—5—61-இல் இந்தியன் வங்கித் திருச்சிராப்பள்ளிக் கிளையின் முன்னாள் ஏசண்டு திரு. வி. பி. கோபாலாச்சாரியார் அவர்கள் புரவலர் திரு. க. இராசகோபால் பிள்ளை அவர்களின் இல்லத்தில் திருக்குறள் ஆய்வு நிகழச் செய்தார்கள். ஆய்வில் கலந்து கொண்ட அன்பர்களுக்கு விருந்து செய்து மகிழ்வித்தார்கள்.

செவிக்குணவு வழங்கச் செய்து வயிற்றுக் குணவும் அளித்து மகிழ்வித்த புரவலர் திரு. ந. சுப்பிரமணியம் செட்டியார் அவர்களுக்கும் திரு. வி. பி. கோபாலாச்சாரியார் அவர்களுக்கும் சங்கம் நன்றி செலுத்துகிறது.

இக்குழு கூடி மகிழ்வதற்கு உதவி செய்த திரு. இராம. சுப்பையச் செட்டியார் அவர்களுக்குச் சங்கத்தின் நன்றி உரியதாகுக !

## திருச்சிராப்பள்ளித் தமிழ்ச் சங்கம், திருச்சிராப்பள்ளி

### 2—8—1960 முதல் 2—8—1961 வரை ஆதாயமும் செலவும்.

| | ரூ. ந.பை | ரூ. | ந.பை | | ரூ. ந.பை | ரூ. | ந.பை |
|---|---|---|---|---|---|---|---|
| **செலவு கணக்கு.** | | | | நன்கொடை ... ... | | 228 | 00 |
| கட்டிடத் திறப்பு விழாச் செலவு | 378—92 | | | சந்தாவும் நுழைவுக் கட்டணமும் ... | | 472 | 00 |
| மின்சாரச் செலவு | 73—26 | | | ஆயுள் சந்தா ... ... | | 100 | 00 |
| தமிழ்ச் சங்க பெயர்ப் பலகை எழுதக் கூலி | 38—00 | | | | | | |
| பொதுச் செலவு | 7—54 | | | **ஆதாய வரவு கணக்கு.** | | | |
| சம்பளம்—இராமநாதன் | 6—00 | | | வட்டி வரவு | 49—06 | | |
| வங்கிக் கட்டணம் | 3—75 | | | மலர் விற்று வரவு | 45—94 | | |
| | | 507 | 47 | | | 95 | 00 |
| திங்கள் கூட்டச் செலவு ... | ... | 464 | 00 | நிகர செலவு மூலதன நிதிக்கு மாற்றப்பட்ட தொகை... | | 218 | 17 |
| அச்சுக்கூலியும் ஸ்டேஷனரியும் | ... | 98 | 18 | | | | |
| திருக்குறள் வகுப்புச் செலவு... | ... | 28 | 00 | | | | |
| தபால் தந்திச் செலவு ... | ... | 10 | 24 | | | | |
| போக்குவரத்துச் செலவு ... | ... | 5 | 28 | | | | |
| | | 1,113 | 17 | | | 1,113 | 17 |

என்னுடைய அறிக்கைக்கு உட்பட்டு மேற்படி ஆதாய செலவு கணக்கு சரியாக இருந்தது.

திருச்சிராப்பள்ளி,
16—9—1961

எஸ். திருநாவுக்கரசு,
சார்ட்டர்டு அக்கௌண்டண்ட்.
(கணக்கு ஆய்வாளர்).

எ. பா. மதுரம், தலைவர்.
மு. அ. அருணசலம், துணைத் தலைவர்
தெ. துரைராசன், அமைச்சர்.
அ. வெ. ர. கிருஷ்ணசாமி, துணை அமைச்சர்.
ஆவி.க. ஆவிச்சி செட்டியார், பொருளாளர்.

## திருச்சிராப்பள்ளித் தமிழ்ச் சங்கம்
## ஆட்சிக்குழு உறுப்பினர்கள்



புரவலர்
திரு. ரா ஜெயதேவன் செட்டியார்



புரவலர், திரு.
ஆ. வி. க. சோமசுந்தரம் செட்டியார்



புரவலர்
திரு. டி. என். இராஜேந்திரன்



புரவலர்
திரு. க. அப்புலிங்கம்



புரவலர், திரு.
ரா. கிருஷ்ணசாமிரெட்டியார் M. L. A.

# திருச்சிராப்பள்ளித் தமிழ்ச் சங்கம்

## ஆட்சிக்குழு உறுப்பினர்கள்



திரு.
அ. ராம. சு. சுப்பையாச் செட்டியார்



வித்துவான்
திரு. கு. விசுவநாதம்



திரு. கு. வரதராஜன், பி.ஏ.,



புரவலர்
திரு. லெ. அரு. அருணாசலம் பிள்ளை



வித்துவான்
திரு. வி. துரைசாமி

## திருச்சிராப்பள்ளித் தமிழ்ச் சங்கம், திருச்சிராப்பள்ளி

### 2—8—1961ந் தேதி ஆஸ்தி இருப்பு பொறுப்பு விபரம்

| பொறுப்பு | ரூ ந.பை | ரூ. | ந.பை | ஆஸ்தி | ரூ. ந.பை | ரூ. | ந.பை |
|---|---|---|---|---|---|---|---|
| மூலதன நிதி. | | | | புத்தகம் கொள்முதல் ... ... | | 21 | 33 |
| ஆரம்ப இருப்பு | 1,744—05 | | | கைமாத்துக் கணக்கு. | | | |
| 2—8—61 முடிய இருப்பு | 218—17 | | | திறப்பு விழா போட்டோ எடுக்க அட்வான்ஸ் ... | | 5 | 00 |
| | | 1,525 | 88 | கட்டிட கணக்கு ... ... | | 1,689 | 85 |
| கட்டிட நிதி ... ... | | 33,918 | 84 | தளவாட சாமான்கள் ... ... | | 928 | 35 |
| கிருஷ்ணு அண் கோ. ... ... | | 2 | 00 | அட்வான்ஸ். | | | |
| | | | | நுஸ்கி | 500—00 | | |
| | | | | எஸ். ஆர் எம். எஸ். சுப்பையா செட்டியார் | 28—11 | | |
| | | | | காண்ட்ராக்டர் அப்துல் சுபான் | 30,000—00 | | |
| | | | | தென்மதருஸ் எலெக்டிரிக் சப்ளை கார்ப்பரேஷன் லிட்., திருச்சி | 60—00 | | |
| | | | | ரம்போலா மாஸ்கரேனஸ் | 10—00 | | |
| | | | | எலக்ட்ரிஷியன் டி. ஆர். தர்மலிங்கம் | 135—00 | | |
| | | | | சிட்டி எலக்ட்ரிக் ஸ்டோர்ஸ் | 1,000—00 | | |
| | | | | | | 31,733 | 11 |
| | | | | இந்தியன் பாங்க், லிமிடெட், திருச்சி ... | | 915 | 60 |
| | | | | ரொக்க இருப்பு ... ... | | 153 | 48 |
| | | 35,446 | 72 | | | 35,446 | 72 |

என்னுடைய அறிக்கைக்கு உட்பட்டு மேற்படி ஆஸ்தி இருப்பு பொறுப்பு விபரம் சரியாக இருந்தது.

திருச்சிராப்பள்ளி,
16—9—1961

எஸ். திருநாவுக்கரசு,
சார்ட்டர்டு அக்கௌண்டண்ட்.
(கணக்கு ஆய்வாளர்).

எ. பா. மதுரம், தலைவர்.
மு. அ. அருணுசலம், துணைத் தலைவர்.
தெ. துரைராசன், அமைச்சர்.
அ. வெ. ர. கிருஷ்ணசாமி, துணை அமைச்சர்.
ஆவி. க. ஆவிச்சி செட்டியார், பொருளாளர்.

### ஆடிட்டர் அறிக்கை.

மேற்கண்ட ஆஸ்தி பொறுப்பு ஸ்டேட்மெண்டையும், ஆதாய செலவு கணக்கையும் சங்கத்துப் புத்தகங்களுடனும், வரவு, செலவு ரசீதுகளுடனும் பரிசோதித்தேன்.

எனக்குத் தேவையான சமாசாரங்களையும், கேள்வி சமாதானங்களையும் அடைந்தேன். ஆஸ்தி பொறுப்பு ஸ்டேட்மெண்டும், ஆதாய செலவு கணக்கும், உண்மையானதும், சரியானதுமான நிலைமையைக் காட்டுகின்றது என்று அபிப்பிராயப்படுகின்றேன்.

திருச்சிராப்பள்ளி,
16—9—1961.

எஸ். திருநாவுக்கரசு,
சார்ட்டர்டு அக்கௌண்டண்ட்.

# சங்க வரலாறு

—★—

நமது திருச்சிராப்பள்ளித் தமிழ்ச் சங்கத்தின் 'பிறப்பு வரலாறு' எதிர்பாராதவிதமாக, எளிமையான நிலையில் நேர்ந்ததொன்றாகும். நம் நகர்த் தமிழன்பர்களுள் சிலர், "குறள் அன்பர்கள்" எனும் பெயரால் பல நாட்களாக, புரோமனேடு ரோடு 2-ஆம் எண் இல்லத்தில், அவ்வப்போது இலக்கியக் கூட்டங்களுக்கு ஏற்பாடு செய்துவந்தனர். அக்கூட்டங்களில் கலந்துகொண்ட பலருள் ஒருவரான திரு. சே. மு. அ. பாலசுப்பிரமணியம் செட்டியாரவர்கள், சிறப்பான தமிழ்ப்பணி யாதாயினும் செய்துவர விரும்பியமையால், "திருக்குறள் சிந்தனைக் குழு" என்ற ஒன்று உருவாகித் திங்களுக்கு இருமுறை, தில்லைநகர் A-7-ஆம் எண் இல்லத்தில், திருக்குறள் ஆராய்ச்சி செய்துவந்தது. நகரின் பல்வேறு துறையினரான தமிழன்பர்கள் அக்கூட்டங்களில் கலந்துகொண்டார்கள் மேலும் விரிந்த அடிப்படையில் தமிழ்ப்பணி நடைபெறுதல்வேண்டும் என்ற ஆர்வம், யாவர் மனத்திலும் கிளர்ந்தெழுந்து வந்தது. திருவள்ளுவராண்டு மார்கழி 26-ஆம் நாள் (4—1—56) தமிழ்க் கல்லூரி ஒன்று நிறுவுவதுபற்றிக்கலந்து பேசுதற்கெனப் புரோமனேடு ரோடு, 2-ஆம் எண் இல்லத்தில் ஒரு கூட்டம் நடைபெற்றது. அதையடுத்து 8—2—56-இல் "திருச்சிராப்பள்ளித் தமிழ்ச் சங்கம்" அமைப்பது குறித்து அதே இல்லத்தில் 60-க்கு மேற்பட்ட தமிழன்பர்கள் கூடிக் கலந்துரையாடிக் கலைந்தனர். இத்தகு முயற்சிகளின் பயனாக, திருவள்ளுவராண்டு 1987, மாசித் திங்கள் 28-ஆம் நாள் (11—3—56) திருவரங்கம், வாசுதேவபுரம், "ராஜபவன்" இல்லத்தில் திரு. தி. பொ. மாணிக்கவாசகம் பிள்ளை அவர்கள் தலைமையில் கூடிய கூட்டத்தில்தான், "திருச்சிராப்பள்ளி நகரில் தமிழ்ச் சங்கம் நிறுவுவதென" ஒருமுகமாக முடிவு செய்யப்பெற்றது. அதற்கு,

திரு. சே. மு. அ. பாலசுப்பிரமணியம் செட்டியாரவர்கள் - தலைவர்,

வித்துவான், திரு. ஐயன்பெருமாள் கோனாரவர்கள் - துணைத்தலைவர்.

திரு. தெ. துரைராசப் பிள்ளையவர்கள் - செயலாளர்.

மேலும் பதின்மூவர், செயற்குழு உறுப்பினராக அமைந்தனர். சங்கத்திற்கான சட்டதிட்டங்களை அமைத்து, முறையாகப் பதிவு செய்தாகவேண்டும் என்பதும் முடிவானது. இது நிற்க, தலைவர் திரு. சே. மு. அ. பாலசுப்பிரமணியம் செட்டியாரவர்கள், தமது அலுவலினின்றும் விடுதலைபெற மீண்டும் விரும்பியமையால், திருவள்ளுவராண்டு, 1987, ஐப்பசித் திங்கள் 9-ஆம் நாள் (25—10—58) கூடிய செயற்குழுக் கூட்டத்தின்போது உருவான சங்கத்தின் சட்டதிட்டங்களுக்கேற்ப ஆட்சிக் குழுவும் பின்வருமாறு திருத்தி அமைக்கப்பெற்றது.

**தலைவர் :** டாக்டர் எட்வர்டு பால் மதுரம், எம். பி.

**துணைத் தலைவர் :** தோ. மு. நல்லசாமி,

மு. அ. அருணாசலம் செட்டியார்.

**அமைச்சர் :** தெ. துரைராசப் பிள்ளை.

**துணை அமைச்சர் :** வே. மி. சம்மனசு, எம். ஏ.,

**பொருளாளர் :** சு. ராம. சுப்பையாச் செட்டியார்.

**உறுப்பினர் :** கி. ஆ. பெ. விசுவநாதம்,
மெ. கயிலைஅனந்தர், பி. ஏ., பி. எல்.,
சே. மு. அ. பாலசுப்பிரமணியம் செட்டியார்,
தி. பொ. மாணிக்கவாசகம் பிள்ளை,
வித்துவான், திரு. ஐயன்பெருமாள் கோனுர்,
டாக்டர் G. விசுவநாத பிள்ளை, எம். பி., பி. எஸ்.,
மு. ஐயன்பெருமாள் கோனுர்,
G. அண்ணாமலை முத்துராஜா,
K. இராசகோபால் பிள்ளை,
வித்துவான், தி. பட்டுச்சாமி ஓதுவார்,
ரம்போலா மாஸ்கரேனஸ், எம். ஏ.,
M. முத்துசாமி பிள்ளை, பி. ஏ., பி. எல்.,
வித்துவான், கோ. இரத்தினம் பிள்ளை,
G. அப்புலிங்கம், (**கலைவாணன்**)
R. நாகசுந்தரம்,
வித்துவான், வி. அ. பரிமேலழகர்.



## முதல் நான்காண்டுகள்

— * —

திருவள்ளுவராண்டு 1987 மாசித்திங்கள் 28 (11-3-56) முதல் திருவள்ளுவராண்டு 1991 ஆவணித்திங்கள் 13 (28-8-60) முடிய உள்ள முதல் நான்காண்டுகளில் 22 முறைகள் ஆட்சிக்குழு கூடியுள்ளது.

இந்நான்காண்டுக் காலத்தில் நம் சங்கப் பேரவை 4 முறைகள் கூடியுள்ளது. சங்க உறுப்பினர் எண்ணிக்கை 92-இல் இருந்து 134-ஆக உயர்ந்துள்ளது.

இக்காலத்தில் 20 விழாக்கள் நடைபெற்றுள்ளன. தமிழவேள், **P. T.** இராசன், **Bar-at-law**, எம்.எல்.ஏ., அவர்கள்,முத்தமிழ்க் காவலர், கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள், அண்ணாமலைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர், திரு. தி. மு. நாராயணசாமி பிள்ளை, எம். ஏ., பி. எல்., அவர்கள், திரு. கயிலை அனந்தர் பி. ஏ., பி. எல்., அவர்கள், பேராசிரியர், இருதயசாமி ரெட்டியார், எம். ஏ., அவர்கள், டாக்டர் எ. பா. மதுரம் எம். எல். ஏ., அவர்கள், திரு. மு. அ. அருணாசலம் செட்டியார் அவர்கள், பேராசிரியர், **M. S** சீனிவாச சர்மா எம். ஏ., அவர்கள், வித்துவான், செம்பொருட்காட்சியர் ஐயன்பெருமாள் கோனார் அவர்கள், அருள்திரு. ஜே. தனசாமி **S. J.** அவர்கள் ஆகிய சான்றோர் நம் பெருமைக்குரிய விழாத் தலைவர்கள்.

தவத்திரு. குன்றக்குடி அடிகளார் அவர்கள், டாக்டர் மா.இராசமாணிக்கனார், எம்.ஏ.எல்.டி எம். ஓ. எல்., பி. எச். டி. அவர்கள், மதுரைத் தமிழ்ச்சங்க அமைச்சர், திரு. கி. பழநியப்பன் அவர்கள், பேராசிரியர் வெள்ளைவாரணனார் அவர்கள், பேராசிரியர், மு. அண்ணாமலை எம். ஏ. அவர்கள், பசுமலை நாவலர் டாக்டர் சோமசுந்தர பாரதியார் அவர்கள், தமிழவேள், **P. T.** இராசன், **Bar-at-law** எம். எல். ஏ. அவர்கள், தஞ்சை, திரு. சுயம்பிரகாசம் அவர்கள், செந்தமிழ்க்காவலர், டாக்டர் அ. சிதம்பரநாதன் செட்டியார், எம். ஏ பி. எச். டி. அவர்கள், பேராசிரியர், லெ. ப. கரு. இராமநாதன் செட்டியார் அவர்கள், முத்தமிழ்க் காவலர் கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள், திருவாசகமணி, **K. M.** பாலசுப்பிரமணியம், பி. ஏ., பி. எல்., அவர்கள், ஆட்சி மொழிக்காவலர் கீ. இராமலிங்கனார், எம். ஏ. அவர்கள், பெருஞ்சொல் விளக்கனார் அ. மு. சரவண முதலியார் அவர்கள், பேராசிரியர், சோமலெட்சுமணன் செட்டியார் அவர்கள், பேராசிரியர் தேவநேயப் பாவாணர் அவர்கள், நீதிபதி திரு. **S.** மகராசன் பி. ஏ., பி. எல்., அவர்கள், பேராசிரியர் **P.** சவரிமுத்து எம். ஏ., அவர்கள், பேராசிரியர் தாமஸ் சீனிவாசன் எம். ஏ., அவர்கள், தண்டல்நாயகம் திரு. பாஸ்கரத் தொண்டைமான் எம். ஏ., ஐ. ஏ. எஸ். அவர்கள், தமிழ்க் கடல் ராய. சொக்கலிங்கம் அவர்கள், தமிழ்நாடு முதலமைச்சர், திரு. கு. காமராசர் அவர்கள்,பொதுப்பணித்துறைஅமைச்சர் திரு. கக்கன் அவர்கள், திரு. **A** சாமிமுத்து எம். ஏ., அவர்கள், திரு. க. அப்துல் சத்தார் எம். ஏ., அவர்கள், திரு. **S.** இராமமூர்த்தி எம். ஏ., அவர்கள், திரு. சி. எஸ். கமலபதி எம். ஏ., அவர்கள், திரு, **R** இராதாகிருட்டினன் எம். ஏ., அவர்கள், திரு. இராமகிருட்டினன் எம். ஏ., அவர்கள், திரு. **D N** கிருட்டினமூர்த்தி எம்.ஏ., அவர்கள், திரு. **P.** இராசகோபாலன் எம். ஏ., அவர்கள், திரு. லோபோ எம். ஏ., அவர்கள், புலவர், வீ. து. தயாளசாமி அவர்கள். திரு. கோ. கலியராசு பி. ஏ., பி. இ. டி. அவர்கள், திரு. பி. அப்துல் கரீம் பி. ஏ., பி. எல்., அவர்கள், திரு. வி. நடராசன் எம். ஏ., அவர்கள், புலவர், அ.ச. மைக்கேல்சாமி உடையார் அவர்கள், குடந்தை, ப.சுந்தரேசனார் அவர்கள் முதலிய அறிஞர் பெருமக்கள் நம் மதிப்பிற்குரிய சொற்பொழிவாளர்கள்.

**சொற்பொழிவுத் தலைப்புக்கள் :**

சங்கத்தின் இன்றியமையாமை, தமிழரும் சங்க கால வாழ்வும், வள்ளுவர் உள்ளம், நான் கண்ட மலேயா, சில குறட்பாக்கள், தமிழ்ச் சொல்வளம், அயல் நாடுகளில் நான் கண்டறிந்தவை, கம்பன் படைத்த ஓரரிய பாத்திரம், வள்ளுவர் முதல் கம்பன் வரை, வான் வெளிச் செலவு, இலக்கியச் செல்வம், மாதவி - கண்ணகி - கோவலன், ஆங்கில - ஹிந்தி - தமிழ்ப் பண்பாடுகள், இந்திய - உருசிய - அமெரிக்க அரசியல் அமைப்புக்கள், அன்புடைமை - விருந்தோம்பல், வீரமா முனிவர், பண் ஆராய்ச்சி முதலியன.

**வருகை தந்து பெருமை தந்த அமைச்சர்கள் :**

தமிழ் நாடு முதலமைச்சர் திரு. கு. காமராசர் அவர்கள், பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. ப. கக்கன் அவர்கள்.

**நம் பாராட்டிற்குரியவர்கள் :**

திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள், 'முத்தமிழ்க்காவலர்' என்னும் பட்டம் வழங்கப்பெற்றுப் பரிசளிக்கப்பெற்றனர்கள்.

டாக்டர் K. S. கிருட்டினன் திருச்சிக்கு வந்தபோது அவர்களுக்கு வரவேற்பிதழ் வாசித்தளிக்கப் பெற்றது. அறுபதாண்டுகள் வாழ்ந்த அறுமணிகள் திவான் பகதூர், N. இராமசாமி ஐயர், பி. ஏ., பி. எல்., அவர்கள், திரு. தி. பொ. வேதாச்சலம், பி. ஏ., பி. எல்., அவர்கள், புதுக்கோட்டை அண்ணலார், சுப்பிரமணியம் அவர்கள், காரைக்குடி தமிழ்க்கடல் ராய. சொக்கலிங்கம் அவர்கள் ஐம்பதாண்டு எய்தியுள்ள திரு. T. S. அருணசலம் எம். எல். சி. அவர்கள் ஆகியோர் நம் வாழ்த்துக் குரியவர்கள். மலேயாவிலிருந்து வந்த தமிழாசிரியர்கள் வரவேற்கப் பெற்றனர்கள்.

தமிழ் மொழி வளர்ச்சிக்குத் தொண்டு செய்துவரும் தமிழ் ஆட்சிமொழிக் காவலர் திரு. கீ. இராமலிங்கனுர் பாராட்டப் பெற்றனர்கள்.

**பரிவுக்குரியவர் :**

30-10-58-இல் சங்கப் புரவலர் சேசசாயி மறைவிற்கு இரங்கற்பா வாசித்தளிக்கப் பெற்றது.



## குறிப்பிடத்தக்க விழாக்கள்

— * —

**தொடக்க விழா :**

17—8—56-இல் 'சங்கத்தின் தொடக்க விழா' தேவர் மன்றத்தில் மிகச்சிறப்பாக நடைபெற்றது. தமிழவேள், P. T. இராசன் பார்-அட்-லா, எம். எல். ஏ. அவர்கள் தலைமை தாங்கினுர்கள். அருட்டிரு, குன்றக்குடி அடிகளார் அவர்கள் துவக்கிவைத்துப் பேருரை நிகழ்த்தினுர்கள். டாக்டர் மா. இராச மாணிக்கனுர் எம். ஏ., எல். டி., எம். ஓ. எல்., பி.எச்.டி. அவர்கள் 'சங்கத்தின் இன்றியமை யாமை' பற்றியும் மதுரைத் தமிழ்ச் சங்க அமைச்சர் திரு. க. பழநியப்பன் அவர்கள், 'தாய்மொழிப்பற்று' பற்றியும் சொற்பொழி வாற்றினுர்கள். திரு. கி. ஆ. பெ. விசுவ நாதம் அவர்கள், வரவேற்புரையும் நன்றி யுரையும் வழங்கினுர்கள்.

**பட்டமளிப்பு விழா :**

16—12—56-இல் தேவர் மன்றத்தில் நம் நகர்த் தமிழறிஞர் திரு. கி. ஆ. பெ. விசுவ நாதம் அவர்களுக்குப் 'பட்டமளிப்பு விழா' நடைபெற்றது. அண்ணுமலைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர், திரு. தி. மு. நாராயண சாமி பிள்ளை எம்.ஏ.,பி.எல்., அவர்கள் தலைமை தாங்கி '**முத்தமிழ்க் காவலர்**' எனும் பட்ட மளித்துச் சிறப்பித்தார்கள், முதுபெரும் புலவர் கணக்காயர், டாக்டர் நாவலர் ச. சோமசுந்தர பாரதியார் எம். ஏ., பி. எல்., பி. எச். டி. அவர் கள் பொற்பதக்கம் அணிவித்துப் பொன் ஞடை போர்த்தி வாழ்த்தினுர்கள். தமிழவேள், **P. T.** இராசன், பார்-அட்-லா எம். எல். ஏ. அவர்கள், திரு. S. சுயம்பிரகாசம் அவர்கள், செந்தமிழ்க்காவலர், டாக்டர், அ. சிதம்பர நாதன் செட்டியார், எம். ஏ., பி. எச். டி. அவர் கள், பேராசிரியர் லெ. ப. கரு. இராமநாதன் செட்டியார் அவர்கள் ஆகிய பேரறிஞர்கள் பாராட்டுரைகள் வழங்கினுர்கள். மதுரைத் தமிழ்ச் சங்கம், கரந்தைத் தமிழ்ச் சங்கம் போன்ற நாடெங்கனுமுள்ள நிறுவணங்கள் பாராட்டிதழ்களும் பரிசுகளும் வழங்கின. இலங்கை, மலயம் முதலிய நாடுகளிலிருந்தும் வாழ்த்துச் செய்திகள் வந்து குவிந்தன. இது நகர மக்களின் பாராட்டைப்பெற்ற பெருவிழா என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

**கால்கோள் விழா :**

17—9—59-இல் சங்கத்திற்குரிய இடத்தில் அமைந்த பந்தலில் சங்க மன்றக் 'கால்கோள் விழா' சிறப்பாக நடைபெற்றது. சங்கத் தலைவர் டாக்டர் எ. பா. மதுரம் எம். எல். ஏ. அவர்கள் தலைமை தாங்கினுர்கள். தமிழ் நாடு முதலமைச்சர் திரு. கு. காமராசர் அவர்கள், கால்கோள் செய்து உரையாற்றினுர்கள். பொதுப்பணித்துறை அமைச்சர், திரு. கக்கன் அவர்களும் சொற்பொழிவாற்றினுர்கள். அமைச்சர்களுக்கு வரவேற்பிதழ்கள் படித் தளிக்கப்பெற்றன.

**மலர் வெளியீடு :**

11-11-58-இல் முத்தமிழ்க்காவலர்,கி.ஆ.பெ. விசுவநாதம் அவர்களின் 'மணி விழா' தேவர் மன்றத்தில் நடைபெற்றபோது நம் சங்கச் சார்பாக 'மணி விழா மலர்' ஒன்று அவர் களுக்கு அன்பளிப்பாக வழங்கப்பெற்றது.

## இலக்கிய இலக்கண வகுப்புக்கள்

திங்கள், புதன், வெள்ளிக்கிழமைகளில் முறையே இலக்கணம், திருக்குறள், சங்க இலக்கிய வகுப்புக்கள் நடைபெற்று வந்தன. முதலில் புரோமனேடு ரோடு 2-ஆம் இல்லத்தில் தொடங்கப் பெற்றன. பின்னர் தெப்பக் குளம் பிஷப்ஹீபர் உயர்நிலைப்பள்ளிக் கட்டிடத்தில் நடைபெற்றன. பின்னர் இராசேந்திரா கல்லூரியின் மாடியில் நடைபெற்று வந்தன. திரு. வெ. மி. சம்மனசு எம். ஏ. அவர்களும், புலவர் அரசப்பன் அவர்களும், புலவர் கோடப்பிள்ளை அவர்களும், புலவர் தயாளசாமி அவர்களும் திருக்குறள், சிலப்பதிகாரம், புறநானூறு, குறுந்தொகை முதலிய இலக்கியப் பாடங்கள் நடத்தி வந்தனர். புலவர், சம்பந்தமூர்த்தி அவர்கள். புலவர் சுந்தரம் அவர்கள், புலவர் ப. இரா. கந்தசாமி பி. ஓ. எல். அவர்கள், புலவர் இரத்தினசபாபதி அவர்கள், முதலியோர் நன்னூல், யாப்பு இலக்கணப்பாடம் நடத்தி வந்தனர். ஓய்வுபெற்ற முதியோர், அலுவலர், இளைஞர், மாணவர், பெண்கள் ஆகிய 25 பேர்கள் தொடர்ந்து பாடங்கேட்டு வந்துள்ளனர் ஏன்பது குறிப்பிடத்தக்கதாகும்.

திருச்சி சேவா சங்கத்தில் வாரந்தோறும் புலவர், வீ. து. தயாளசாமி அவர்கள், திருக்குறள் வகுப்பு நடத்தி வருகிறுர்கள்.

பயன் கருதாமல் பாடம் சொல்லி வந்த புலவர் பெரு மக்களுக்கு நம் நன்றி உரியதாகுக.

### புலவர் வகுப்புக்கள் :

புலவர் தேர்வு எழுத விரும்பிய தமிழன்பர்களுக்காகச் சங்க அமைச்சர் திரு. தெ. துரைராசப் பிள்ளை எம். எல். சி. அவர்களால் புலவர் வகுப்புத் தொடங்கி வைக்கப்பெற்றது. ஏறக்குறைய 30 பேர் பயிற்சி பெற்றனர். ஐவர் தேர்வு எழுதினர். மூவர் தேறினர். புலவர் கடுவெளி அனந்தர் அவர்கள், புலவர் வி. அ. பரிமேலழகர் அவர்கள், புலவர் வி. நரசிம்மன் எம்.ஏ., அவர்கள், புலவர் M. ஞானப்பிரகாசம் அவர்கள் ஆகியோர் வகுப்புக்களை நடத்தி வந்தனர். அவர்களுக்குச் சங்கம் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளது.

### திருக்குறள் தேர்வு மன்றம் :

8—9—57-இல் திருக்குறள் தேர்வு மன்றம் பெருஞ்சொல் விளக்கனுர் அ. மு. சரவண முதலியார் அவர்களால் தொடங்கி வைக்கப்பெற்றது. திருக்குறள் மழலைத் தேர்வு நடத்தி, தேறிய முதல் மூவர்க்குப் பொன், வெண் பொன், வெள்ளிப் பதக்கங்கள் வழங்கப்பெற்றன. தேறிய ஏனையோர்க்கு நற்சான்றிதழ்கள் அளிக்கப்பெற்றன.

தேர்வு மன்றத்தின் தலைவர், முத்தமிழ்க் காவலர், கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்களுக்கும் செயலர், திரு. வெ. மி. சம்மனசு எம். ஏ., அவர்களுக்கும், புலவர், வி. இளங்கண்ணனுர் அவர்களுக்கும், சங்கம் நன்றி செலுத்துகிறது.

### சிந்தனைக்குழு :

8—2—57-இல் தமிழ் மொழி, கலை, நாகரிகம், பண்பாடு ஆகியனபற்றிச் சிந்தித்துத் தெளிவுபெறும் பொருட்டு, திரு. மெ. கயிலை அனந்தர் பி. ஏ.. பி. எல்., அவர்கள் தலைமையில் தொடங்கப்பெற்றது. திங்கள் தோறும் கூடி விவாதித்து வந்துள்ளது. இக்குழுவின் பணிகளைச் சிறப்பாக நடத்திவந்த செயலர், திரு. ம. முத்துசாமி பி. ஏ,, பி. எல்., அவர்

களுக்கும், பேராசிரியர், ரம்போலா மாஸ் கரனேஸ் எம்.ஏ.. அவர்களுக்கும் சங்கத்தின் நன்றி உரியதாகுக.

**சொற்பயிற்சிக்குழு :**

பேச்சுக்கலையில் பயிற்சிதரும் பொருட்டு 27-4-57-இல் முத்தமிழ்க்காவலர், கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள் தலைமையில் சொற் பயிற்சிக்குழு தொடங்கப்பெற்றது. திங்கள் தோறும் கூடி வந்துள்ளது. மருத்துவர் களும் வழக்கறிஞர்களும், அலுவலரும், ஆசி ரியர்களும், வணிகரும் பிறரும் சொற்பயிற் சிக் கூட்டங்களில் கலந்துகொண்டுள்ளனர்.

இக்குழுவின் செயலராகப் பணியாற்றிய, புலவர், அரசப்பனுர் அவர்களுக்கும், பேராசிரி யர், சி. நயினுர் முகமது எம். ஏ., அவர்களுக் கும் சங்கத்தின் நன்றி உரியதாகுக.

**திருக்குறள் ஆய்வுக்குழு :**

திருக்குறளில் ஆய்வு செய்து அரும் பொருள் காணும் நோக்கோடு 'திருக்குறள் ஆய்வுக் குழு' அமைக்கப்பெற்றது. ஆர்வ மிக்க செல்வர்களால் தமிழறிஞர்கள் அவ்வப் போது அழைக்கப்பெற்று அருங் குறட்பாக் களில் ஆய்வு செய்யப்பெறும். சங்கத்தின் துணைத் தலைவர் திரு. மு. அ. அருணுசலம் செட்டியார் அவர்களின் இல்லத்தில் செவிக் கும் நாவிற்கும் விருந்துதரும் இவ்வமைப்பு துவக்கி வைக்கப்பெற்றது. சங்கத் தலைவர் டாக்டர் எ.பா. மதுரம் எம்.எல்.ஏ. அவர்களின் இல்லம், திரு. க. இராசகோபால் பிள்ளை அவர் களின் இல்லம், சங்கப் பொருளாளர் திரு. ஆவி. க. ஆவிச்சி செட்டியார் அவர்களின் இல்லம், திரு. ப. ரெங்கசாமி ரெட்டியார், பி. ஏ., பி. எல். அவர்களின் அலுவலகம், வரலாற்றுச் சிறப்பிடமான திருவெள்ளறை, திரு ம. முத்துசாமி, பி.ஏ., பி.எல். அவர்களின் இல்லம் முதலிய இடங்களில் குழு கூடி குறள் ஆய்வில் ஈடுபட்டது.

விருந்து செய்து சிறப்பித்து ஆய்வுக் கூட்டங்களையும் சிறப்புற நடத்தித் தமிழறிஞர்களைச் சிந்திக்கச் செய்த நம் துணைத்தலைவர் திரு. மு. அ. அருணுசலம் செட்டியார் அவர்கள், சங்கத் தலைவர் டாக்டர் திரு. எ. பா. மதுரம் அவர்கள், திரு. க. இராசகோபால் பிள்ளை அவர்கள், சங்கப் பொருளாளர் திரு. ஆவி. க. ஆவிச்சி செட்டியார் அவர்கள், திரு. ப. ரெங்கசாமி ரெட்டியார், பி. ஏ., பி. எல். அவர்கள், திரு. எம். பாலசுப்பிரமணியச் செட்டியார் அவர்கள், திரு. எம். முத்துச்சாமி பி. ஏ., பி. எல். அவர்கள் ஆகியோர்களுக்குச் சங்கம் கடமைப்பட்டுள்ளது.

**மகிழ்உலா :**

1—9—59-இல் தமிழ்ச்சங்க அன்பர்கள் முத்தரசநல்லூருக்கு மகிழ்உலாவாகச் சென் ருர்கள். முத்தமிழ்க்காவலர் திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள் வரவேற்று விருந்து செய்து மகிழ்வித்தார்கள்.

முத்தரசநல்லூருக்கும், திருவெள்ளறைக் கும் மகிழ்உலாவாகத் தமிழறிஞர்களை அழைத்துச்சென்று கண்களுக்கும் செவிக்கும் வயிற்றுக்கும் விருந்தளித்த முத்தமிழ்க் காவலர் அவர்களுக்கும் திரு. ந. சுப்பிர மணியம் செட்டியார் அவர்களுக்கும் நம் பாராட்டுக்கள் உரியனவாகுக.

**கலைச் சொல்லாக்கக் குழு :**

1—10—57-இல் டாக்டர் திரு. சோம். லெட்சுமணன் செட்டியாரவர்களால் கலைச் சொல்லாக்கக் குழு தொடக்கிவைக்கப் பெற்றது.

**தொல்காப்பியப் பயிற்சிக் குழு :**

6—11—57-இல் பேராசிரியர் தேவநேயப் பாவாணர் அவர்களால் இக்குழு தொடக்கி வைக்கப்பெற்றது.

முதல் முன்று ஆண்டுகளில் துணைஅமைச்ச ராக இருந்து பணியாற்றிய திரு. வே. மி. சம்மனசு எம். ஏ. அவர்களுக்கும் பொருளாள ராகப் பணிபுரிந்த திரு. சு. சுப்பையாச் செட்டி யார் அவர்களுக்கும் நாம் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளோம்.

## திருச்சிராப்பள்ளித் தமிழ்ச் சங்கம்

### ஆட்சிக்குழு உறுப்பினர்கள்



பேராசிரியர் திரு.
ரம்போலா மாஸ்கரேனஸ், M.A.



திரு. தி. பொ.
மாணிக்கவாசகம் பிள்ளை



வித்துவான்
திரு. தி. பட்டுச்சாமி ஓதுவார்



வித்துவான்
திரு. வி. அ. பரிமேலழகர்



வித்துவான்
திரு. கோ. இரத்தினம் பிள்ளை

## திருச்சிராப்பள்ளித்
## தமிழ்ச் சங்கம்
## ஆட்சிக்குழு உறுப்பினர்கள்



புரவலர்
திரு. ந. சுப்பிரமண்யம்
செட்டியார்



புரவலர்
த. வீ. வீரப்பச் செட்டியார்



புரவலர்
திரு. A. சோமசுந்தர ரெட்டியார்
M. L. C.



திரு. ஆர். நாகசுந்தரம் M. C.



பேராசிரியர்
திரு. தெ. செ.
பாலசுப்பிரமண்யம், எம். ஏ.



புலவர்
திரு. கு. திருமேனி B. O. L.

# [ எங்களின் நோக்கங்கள் ]

படித்தவரிடமும் பாமரரிடமும் மனிதப் பண்பாடு பரவுமானால் மனிதரெல்லோரும் புனிதராகத் திகழ்ந்திடுவர். கலையும் நாகரிகமும் பெருகுமானால் மனிதக் கவலைகள் மறைந்துபோய்விடும். ஆதலின் கலை, நாகரிகம், பண்பாடு, மொழி வளரப் பணிசெய்வது எங்களின் இலட்சியமாகும். இயல், இசை, நாடகம், பிற துறைகள் எனும் பிரிவுகளில் சங்கப் பணிகள் இயங்கவேண்டும் என்பதே எங்கள் விருப்பம். அவை வருமாறு:

## I. இயல் :—

### 1. சொற்பொழிவுத் துறை :

மொழி, இலக்கியம், கலை, பண்பாடு போன்ற பொருட்களில் புலமை பெற்ற அறிஞர்களை சொற்பொழிவாற்றச் செய்து மக்களைக் கேட்க வைப்பது.

### 2. சொற்பயிற்சிக் குழு :

மக்களின் மனதைக் கவரும் வண்ணம் சொற்பொழிவாற்றும் வகையில் பேச்சுக் கலையை வளர்ப்பது.

### 3. சிந்தனைக் குழு :

சிந்திக்கும் ஆற்றலை வளர்க்கும் பொருட்டு கூட்டங்கள் கூட்டி விவாதங்கள் நடத்தி வருவது.

### 4. ஆய்வுக் குழு :

ஆயும் இயல்புடையார்க்கு ஆராய்ச்சி செய்யும் வாய்ப்பினை அளிப்பது.

### 5. மாணவர் பகுதி :

கல்விப் பயிற்சிபெறும் பள்ளி, கல்லூரி மாணவர்களுக்குக் கவியரங்கு, உரையரங்கு முதலியன நடத்தி அவர்களின் திறமையைப் பாராட்டி வளர்ப்பது.

## II இசை :

வருங்காலத்தில் இசைக்குழு ஒன்று தோற்றுவித்து, அவ்வப்போது இசையரங்குகள் நடைபெறச் செய்து மக்களிடம் இருக்கும் இசைத்திறனைப் பாராட்டி வளரச் செய்வது. இதற்குப் புகழ்பெற்ற இசைவாணர்களின் ஒத்துழைப்பைப் பெறுவது.

## III நாடகம் :

மக்களிடம் காணப்பெறும் நடிக்கும் திறமையைத் தெரிந்து பயிற்சி கொடுத்து நாடகங்களை நடத்தி வளர்ச்சிபெறச் செய்வது.

## IV பிற துறைகள் :

அழகு தவழும் இடங்கள், மலைவாசத் தலங்கள், வரலாற்றுச் சிறப்புள்ள இடங்கள், கலையுறைவிடங்கள் முதலிய இடங்களுக்குச் சங்க உறுப்பினர் சென்று வருவது.

அவ்வப்போது தேவையான பணிகளைச் செய்துவருவது.



ஸ்ரீ ஷண்முகா பிரஸ், திருச்சிராப்பள்ளி - 8.

## திருத்தங்கள்

அன்புகூர்ந்து பின்வருவனவற்றைக் குறிப்பிட்ட இடத்தில் சேர்த்துப் படிக்கவும்.

1. அறிக்கையின் 3-ஆம் பக்கத்தில் ஆட்சிக்குழு உறுப்பினர் வரிசையில் வித்துவான் திரு. பட்டுச்சாமி ஓதுவார் அவர்களின் பெயர்.

2. 7-ஆம் பக்கத்தில் திங்கள் கூட்ட நிகழ்ச்சிகளைச் சிறப்புற நடத்தித்தந்துள்ள அமைப்பாளர்கள் புலவர் திரு. கு. திருமேனி B. O. L. அவர்கள், திரு. அ. ராம. சு. சுப்பையாச் செட்டியார் அவர்கள் ஆகிய இருவர்க்கும் சங்கத்தின் நன்றி உரியதாகுக.

3. 7-ஆம் பக்கத்தில் குறள் வகுப்பு நடத்தி உதவியுள்ள வித்வான் திரு. வீ. து. தயாளசாமி அவர்களுக்குச் சங்கம் நன்றி செலுத்துகிறது.

4. 8, 9-ஆம் பக்கங்களில் துணை அமைச்சர் திரு. சி. நயினர் முகம்மது அவர்களின் பெயர்.

## ஆயுள் உறுப்பினர்

1. திரு கு. வரதராசப் பிள்ளை
2. ,, சு. அரு. பழனியப்பச் செட்டியார்
3. ,, T. L. வரதராசுலு செட்டியார்
4. ,, ம. முத்துசாமி B. A., B. L.,
5. ,, பொ. மாணிக்கவாசகம் பிள்ளை
6. ,, V. S. மணி ஐயர்
7. வித்துவான் திரு. பட்டுச்சாமி ஓதுவார்



## முத்தமிழ்க் காவலர் மணிவிழா

தமிழறிஞர் திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்களுக்கு
திருச்சிராப்பள்ளித் தமிழ்ச் சங்கத்தார்
முத்தமிழ்க் காவலர் என்று விருது சூட்டி பொன்னுடை போர்த்தி
கௌரவிக்கிறார்கள்.






முத்தமிழ்க் காவலர் திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்களை
விழா மன்றத்தின் முகப்பில்
தமிழ்ச்சங்க உறுப்பினர்கள் மாலையிட்டு வரவேற்று மகிழ்கிறார்கள்.

# சங்க மன்றக் கால்கோள் விழா



முதலமைச்சர் திரு. கு. காமராசர்
உரையாற்றுகிறார்கள்.



சங்கத் தலைவர் டாக்டர் மதுரம் அவர்கள்
தலைமை உரையாற்றுகிறார்கள்.

# சங்கத்திற்கு இதுவரை நிதி வழங்கிய வள்ளல்கள்.

| | | | |
|---|---|---|---|
| 1. | முத்தமிழ்க் காவலர் திரு. கி. ஆ. பெ. விசுவநாதம்<br>மணியக்காரத் தெரு, திருச்சி. | 1001 | 00 |
| 2. | திரு. தெ. துரைராசப் பிள்ளை, M. L. C.<br>No. 18, சப்ஜெயில் ரோடு, திருச்சி. | 1001 | 00 |
| 3. | ,, மு. அய்யன்பெருமாள் கோனார்<br>பாலக்கரை எடத்தெரு, திருச்சி. | 1001 | 00 |
| 4. | ,, மு. அருணாசலம் செட்டியார்<br>22, ஜெயவிலாஸ், புத்தூர், திருச்சி. | 1001 | 00 |
| 5. | ,, ந. சுப்பிரமணியன் செட்டியார்<br>சப்ஜெயில்ரோடு, திருச்சி. | 1001 | 00 |
| 6. | ,, சா. பெரியசாமி<br>எ.:ரிமங்கலம், சீராத்தோப்பு, திருச்சி. | 1001 | 00 |
| 7. | ,, டாக்டர் எட்வர்டு பால் மதுரம்<br>குருமருந்துசாலை, புத்தூர், திருச்சி. | 2001 | 00 |
| 8. | V. சேஷசாயி (லேட்)<br>அலெக்ஸாண்ட்ரா ரோடு, திருச்சி. | 1001 | 00 |
| 9. | பேராசிரியர் திரு. அய்யன்பெருமாள் கோனார்<br>சின்னக்கடைத் தெரு, திருச்சி. | 1000 | 00 |
| 10. | திரு ஆ. வி. க. சோமசுந்தரம் செட்டியார்<br>,, ஆ. வி. க. ஆவிச்சி செட்டியார் }<br>A. V. K. பாங்க், 3, ஜாபர்சா தெரு, திருச்சி. | 1001 | 00 |
| 11. | ,, அரு. அண்ணாமலை செட்டியார்<br>16, A, காலனி ரோடு. தில்லைநகர், திருச்சி 3 | 1001 | 00 |
| 12. | ,, M. V. கிருஷ்ணமூர்த்தி ராவ்<br>ராயபாளைய நிலையம், திருவரங்கம். | 1000 | 00 |
| 13. | ,, A. சோமசுந்தர ரெட்டியார்<br>63, பட்டர்வொர்த் ரோடு, திருச்சி, | 3000 | 00 |
| 14. | ,, செக்ரடேரியட் நிதியிலிருந்து<br>(திருச்சி மாவட்டத் தண்டல்நாயகம் அவர்கள் மூலமாக) | 5000 | 00 |
| 15. | ,, திரு. த. வீ. வீரப்பச் செட்டியார்<br>குட்ஷெட் ரோடு, பாலக்கரை, திருச்சி. | 1001 | 00 |
| 16. | ,, P. R. நாராயணசாமி அய்யர்<br>ஜவுளி வியாபாரம், பெரியகடைவீதி, திருச்சி 8 | 1001 | 00 |
| 17. | ,, T. V. S. அறநிதி<br>மேல ஆவணி மூல வீதி, மதுரை | 1000 | 00 |
| 18. | ,, சிம்சன் அண் கோ லிமிடெட்<br>கன்டோன்மெண்டு, திருச்சி. | 1000 | 00 |
| 19. | ,, க. ராஜகோபால் பிள்ளை<br>சப்ஜெயில்ரோடு, திருச்சி. | 501 | 00 |

| | | | | |
|---|---|---|---|---|
| 20. | ,, | திருச்சி ரேஷன் சப்ளை ஸ்டோர்ஸ் அறநிதி<br>*(திரு. க. ராஜகோபால் பிள்ளை அவர்கள் மூலம்* | 827 | 84 |
| 21. | ,, | அ. வெ. ர. கிருஷ்ணசாமி ரெட்டியார்<br>*கண்ணன் அச்சகம், தேரடிக்கடைவீதி, திருச்சி.* | 501 | 00 |
| 22. | ,, | கு. வரதராசப் பிள்ளை<br>*திருவள்ளுவர் இல்லம். புத்தூர். திருச்சி.* | 250 | 00 |
| 23. | ,, | சா. ரா. மா. சி. த. பழனியப்ப செட்டியார்<br>*(T. S. T. மானேஜிங் டைரக்டர், திருவானைக்கோயில்)* | 1001 | 00 |
| 24. | ,, | T. A சுந்தரம் பிள்ளை<br>*வெல்ல மண்டி, மயிலம் சந்தை, திருச்சி.* | 1001 | 00 |
| 25. | ,, | தென்சென்னை மின் வழங்கும் நிறுவனம்<br>*பவர் ஹவுஸ், தென்னூர், திருச்சி.* | 1001 | 00 |
| 26. | ,, | சி. த. அரு. அருணசலம் செட்டியார்<br>*அருணசலம் அண் கம்பெனி, ஜவுளி வியாபாரம்,*<br>*பெரியகடைவீதி, திருச்சி.* | 1001 | 00 |
| 27. | ,, | R. கிருஷ்ணசாமி ரெட்டியார் M. L. A.<br>*11-வது கிராஸ், தில்லைநகர், திருச்சி,* | 2000 | 00 |
| 28. | ,, | சு. ப. காசிச் செட்டியார்<br>*வார்னர்ஸ் ரோடு, திருச்சி-1* | 500 | 00 |
| 29. | ,, | R. செயதேவன் செட்டியார்<br>*G. ராதாகிருஷ்ண செட்டியார் & சன்ஸ்*<br>*நகை வியாபாரம், பெரியகடைவீதி, திருச்சி-8* | 500 | 00 |
| 30. | ,, | சு. அரு. பழநியப்பச் செட்டியார்<br>*59, வடக்கு குஜிலித்தெரு. திருச்சி-8* | 250 | 00 |
| 31. | ,, | T. L. வரதராஜுலு செட்டியார்<br>*பெரியகடைவீதி, திருச்சி-8* | 250 | 00 |
| 32. | ,, | க. அப்புலிங்கம் (கலைவாணன்) | 500 | 00 |
| 33. | ,, | ம. முத்துசாமி B. A , B. L.<br>*தில்லைநகர், திருச்சி.* | 100 | 00 |
| 34. | ,, | பொ. மாணிக்கவாசகம் பிள்ளை<br>*வரகனேரி, திருச்சி.* | 100 | 00 |
| 35. | ,, | V. S. மணி ஐயர்<br>*உரிமையாளர், கீதா பிரஸ், திருச்சி-2* | 100 | 00 |
| 36. | ,, | வித்துவான் பட்டுச்சாமி ஓதுவார்<br>*மலைக்கோட்டை. திருச்சி,* | 100 | 00 |



# சங்க மன்றக் கால்கோள் விழா




சங்க அமைச்சர் திரு. தெ. துரைராசப் பிள்ளை
வரவேற்புரை நிகழ்த்துகிறார்கள்.